
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 4 | ஜூன் 1991 | இதழ் 6



வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் } புதன் } : மாலை 7-15—8-30...குடும்ப ஜெபக்கூட்டம்

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு (இரண்டாம் வியாழன் மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 - இரவு 9 மணி

வெள்ளி : மாலை 7-15 - 8-30 குடும்ப ஜெபம்

சனி : மாலை 7-00 9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


1. சபை வளர்ச்சியில் தேக்கம் ஏன்? 1-6
2. நிச்சயமாய் நடக்கக் கூடியவைகள் 7-11
3. கிறிஸ்தவத்தில் சர்வமும் கிறிஸ்துவே 12-16
4. பட்டங்களுக்காகப் பறக்காதீர் 17-18
5. தேவனின் கட்டளைகள் 19-22
6. இயேசுவின் காயங்கள் 23-24
7. தேவனுக்குக் கீழ்ப்படிதல் 25-26
8. உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு 27-28

THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Edito
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 4. June—1991 Issue 6

**ஆசிரியவுரை :**

# சபை வளர்ச்சியில் தேக்கம் ஏன்?

*சபை ஆரம்பமான நாளில் சுமார் 3000 பேர் (அப் 2:41). அது வெகு விரைவில் 5000 (அப் 4:4) மேலும், அது நாளுக்கு நாள் பலுகிப் பெருகிற்று (அப் 6:1) சிறிது காலம்சென்று பார்க்கும் பொழுது " சபைகள் விசுவசாத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின என வாசிக்கிறோம் (அப் 16:5) இது முதலாம் நூற்றாண்டு நிலை.*

*அதே போன்று 19-ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தோன்றின முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவத்தை மீட்டு அமைக்கும் மார்க்கப் புரட்சி வேகமாகப் பரவி, குறுகிய காலத்தில் ஆயிரக்கணக்கான சபைகள் எழும்பி இன்றும் தொடர்ந்து வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ் மண்ணில் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவம் அறிமுகம் ஆகி கால் நூற்றாண்டு கடந்து விட்டது. சபைகளின் எண்ணிக்கையும் ஆவிக்குரிய வளர்ச்சியும் பாராட்டும்படி இல்லையே ஏன்?*

*ஏன் என்றால்* **சபைக்கு வலிமை பொருந்திய வைராக்கியமுள்ள முன்னோடிகள் இல்லை**

*பழைய ஏற்பாட்டில், நியாயாதிபதிகளின் காலங்களில் இஸ்ரவேல் மககளுக்கு நல்ல தலைவர்கள் இல்லாததால் அடிக்கடி எதிரிகளால் தாக்கப்பட்டு சீரழிந்து நின்றனர்.* **அந்நாட்களில் இஸ்ரவேலில் ராஜா இல்லை. அவனவன் தன் தன் பார்வைக்குச் சரி போனபடி செய்து வந்தனர்.** *(நியாயா. 21:25)*

மோசே, யோசுவா போன்ற சிறந்த தலைவர்களின் கீழ் கட்டுப் பாடாக இருந்த அதே மக்கள், நியாயாதிபதிகளின் காலத்தில் தான்தோன்றித் தனமாக நடந்து கொண்டதற்குக் காரணம் சரி-யான தலைமையின்மையே என்பது புலனாகும்.

மக்களை நல்வழிப்படுத்தி அழைத்துக் செல்ல சரியான முன்-னோடிகள் அவசியம் என்பதை வலியுறுத்த, ''தேவன் தம்முடைய குமாரனைப் பற்றும் விசுவகசத்திலும், அறிவிலும் கிறிஸ்தவர்கள் ஒன்றுபட்டு, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்கு பூரண புருஷராகும் வரைக்கும் பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், சிலரை ''சுவி-சேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும், ஏற்படுத்தினார்.'' என்று எபேசுவில் இருந்த சபைக்கும் (எபே 4:11-16) அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத் தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்-தில் ஒப்புவி என்று தீமோத்தேயுக்கும் கட்டளையிடுகிறார். (2 தீமோ 2:2)

இவைகளை நமக்குக் கூறுகிற உண்மை என்ன? சபைகள் பலமடைந்து, ஸ்திரப்படுவதற்கு தேவபக்தியும் ஞானமும், வைராக்கியமும் உள்ள சான்றோர்களின் முன்மாதிரி தேவை என்பதாகும். அவைகள் போதிய அளவு இல்லாத காரணத்தால் இன்றைக்குத் தமிழ் உலகில் உள்ள கிறிஸ்துவின் சபைகள் பொலிவிழந்து, வளர்ச்சி குன்றி, தளர்நடை போடுகின்றன. மூப்பர்களாக இருக்கிறவர்களும், ஊழியர்களும், சபையின் முன்னோடிகளும் கர்த்தரைப் பிரியப்படுத்துவதை விட்டு விட்டு மனிதர்களை எப்படி மகிழ்விக்கலாம் என்பதில் அக்கரை காட்டுகின்றனர். சபை மக்களும் தங்களுக்குப் போதித்துப் புத்தி சொல்லுவர்களை மதிக்காமல், தங்கள் இழுப்புக்கு இணங்கி வரக்கூடிய போதகர்களை அதிகமாய் விரும்புகிறார்கள் (2 தீமோ 4:3)

இதன் காரணமாக சபை வளர்ச்சிக்கான நல்ல பல திட்டங்களைத் தீட்டவும், தீட்டின திட்டங்களை நிறைவேற்றவும் முடியா-மல் முளைத்த குழிக்குள்ளேயே கரளையாய்ப் போன செடியைப் போல காட்சியளிக்கின்றன. இந்நிலை மாற, சிறந்த முன்னோடிகள் உருவாக ஊக்கமாக ஜெபிப்போம்.

## II. சபை சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாக இருக்க வேண்டும்

பல சபைகள் வெறும் எண்ணிக்கையில் மட்டுமே வளர்ச்சி

யைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால் கிறிஸ்தவ நெறிகளைக் கடைப்பிடிக்கும் முயற்சியில் அக்கரை காட்டுவதில்லை. சகோதரர்களே, வீக்கம் வளர்ச்சி அல்ல, அது நோய் உண்மையான வளர்ச்சி, சத்தியத்தின்படி போதிக்கப்பட்டு, சகல நல்ல அம்சங்களிலும் சிறந்து விளங்குவதாகும். மெய்க் கிறிஸ்தவம் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்'' (ஆபகூக் 2;4; கலா 3:11) ''தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்.'' (2 கொரி 5:6) ''விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'' (யோவான் 5:4) ''மரணபரியந்தம் (விசுவாசத்தில்) நிலைத்து நிற்பவனே ஜீவ கிரீடத்தைப் பெறுவான்'' (வெளி 2;10) ''விசுவாசமில்லாமல் தேவனிடத்தில் பிரியமாயிருப்பது கூடாத காரியம்'' (எபி 11;6) என்று பல இடங்களில் விசுவாசத்தின் சிறப்பு பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன.

அந்த விசுவாசம் எப்படி உண்டாகும் என்ற கேள்விக்கு ''விசுவாசம் கேள்வியினாலே வரும்'' (ரோமர் 10;17) என்கிறது. அதாவது தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு வாசித்துச் சிந்தித்துப் பார்க்கும் பொழுது ஒருவனுக்கு விசுவாசம் உண்டாகும் என்று தெரிகிறது. ஆகவே நம்முடைய பிரசங்கங்கள் வேத வாக்கியங்களின் அடிப்படையில் அமைந்து அவைகளைக் கேட்கிற யாவருக்கும் அது தூய, கலப்படமற்ற ஞானப்பாலாகவும், புஷ்டிதரும் உணவாகவும் அமைய வேண்டும் இதைத்தான் தாவீது அரசன் ''நான் உமக்கு விரோதமாக பாவஞ் செய்யாதபடிக்கு உமது வாக்கை என் இருதயத்தில் வைத்து வைத்தேன்'' என்கிறார் (சங் 119:11) ஆகவே விசுவாசிகள் தேவனுடைய வசனங்களால் நன்கு போஷிக்கப்பட்டால் அவர்களுடைய விசுவாசம் செழித்து வளர்ந்து கிறிஸ்தவ வாழ்க்கை உறுதிப்பட்டிருக்கும். அப்பொழுது அவர்கள் பிசாசை எதிர்த்துப் போராட முடியும். அவனும் ஓடிப் போவான் (யாக் 4:7) நோய்வாய்ப் பட்டவர்களுக்கு எவ்வாறு உணவைப் பக்குவப் படுத்தி அவர்களுடைய ஜீரண உறுப்புக்களின் சக்திக் கேற்ப அதைச் செலுத்தி மீண்டும் பலமடையச் செய்கிறோமோ அதுபோன்று விசுவாசத்தை விட்டுப் பின் வாங்கிப் போனவர்களுக்கு சாந்தமாய் திருவசனத்தை உபதேசிக்க வேண்டும் (2 தீமோ 2:26) அப்பொழுது அவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து மீண்டும் சபையோடு இணைந்து கொள்வார்கள்.

## III. சபைக்கு ஒருமைப்பாடு அவசியமும் அவசரமுமான தேவை

**இதோ, சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது** என்று தாவீது அரசன் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னும் (சங் 133:1) அதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, **''சகோதரரே,**

**நீங்கள் எல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தி இருக்கவும் வேண்டும் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்''** என்று பவுலும் (1கொரி 1:10) ஆலோசனை கூறுகிறார்கள். வேறொரு இடத்தில் ''.... சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்'' என்றும் அப்போஸ்தலன் பவுல் எச்சரிப்பு விடுக்கிறார். (எபே 4:3)

அநேக சபைகள் வளர்ச்சியடையாமைக்கு அங்கே காணப்படுசிற ஒற்றுமைக் குறைவே காரணம். ''தனக்குத் தானே பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் விழும்; நிலை நிற்க மாட்டாது (மத் 12:25) என்கிறார். ஆம், ஒற்றுமைக் குறைவுள்ள சபையில், ஒரு சிலர் எடுக்கும் முடிவை வேறு சிலர் எதிர்ப்பார்கள் அதனால் முன்னேற்றம் தடைபடும். அதனால் ஆவிக்குரிய வளர்ச்சி சீர்குலைந்து கட்சி மனப்பான்மை வளரும். யார் பெரியவன் என்ற போட்டியில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் இவர்களுக்கு ஆத்தும ஆதாயம் செய்ய நேரமே இருக்காது. இவர்களுடைய குடுமிபிடிச் சண்டையையும், வாக்கு வாதங்களையும் காண்கிற, கேள்விப்படுகின்ற மக்களும் இவர்களை விட்டு ஒதுங்கிக் கொள்வார்கள். சகோதர ஒருமைப்பாட்டை உலகம் காண முடிந்தால் தான் இயேசு கிறிஸ்துவை தேவனே உலகுக்கு அனுப்பி வைத்தார். மற்றபடி தாமே இந்த பூமிக்கு வரவில்லை. என்பதை உலகம் நம்பும் என்று தமது நீண்ட உருக்கமான ஜெபத்தில் குறிப்பிடுகிறார். (யோவான் 17:21)

தங்கள் சொந்த லாபத்துக்காகவும், காரணங்களுக்காகவும் கர்த்தரின் சரீரமாகிய சபைக்கு ஊறு விளைவிக்க முற்படுபவர்கள் கர்த்தருடைய கோபத்துக்குத் தப்புவது கடினம். தேவன் வெறுக்கிற ஏழு காரியங்களில் சகோதரர்களுக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுவதும் ஒன்று (நீதி 6:19) ஆக இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிற சகோதரனே, சகோதரியே! தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும் என்பதை அறிந்து மனந் திரும்பு (எபி 10:31)

## IV. சபையின் வேலைத் திட்டங்களில் ஈடுபாடு கொள்ளும் மனப்போக்குத் தேவை.

இயேசுகிறிஸ்து, ''இவ்விதமாய் மனுஷர் உங்கள் **நற்கிரியைகளைக்** கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப்

பிரகாசிக்கக் கடவது என்றார் (மத் 5:16) .... **நற்கிரியை-களைச்** செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாக இருக்கிறோம்''. என்கிறார் பவுல் (எபே 2:10) **நற்கிரியைகளைச்** செய்ய பக்தி வைராக்கியமுள்ளவைகளாக (தீத்து 2:14) என்று பல சந்தர்ப்பங்களில் நாம் நற்கிரியைகள் செய்ய வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. சபை வளர்ச்சி மந்திரத்தால் ஏற்பட்டு விடாது. வளர்ச்சிக்காக திட்டமிட வேண்டும். அந்தத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். சில அங்கத்தினர்கள் பொருளாதார அலுவல் கூட்டங்களில் பெரிய பெரிய யோசனைகளைக் கூறித் தங்கள் மேதா விலாசத்தை வீராவேசப் பேச்சை பறைசாற்றிக் கை தட்டல் பெறுவார்கள். ஆனால் அத்திட்டங்களை நிறைவேற்றும் வேளை வரும்போது மறைந்து விடுவார்கள். இது நல்ல நடைமுறை அன்று, சபை வளர்ச்சிக்கு அனைத்து அங்கத்தினர்களும் பொறுப்பேற்க வேண்டும். எல்லாப் பொறுப்புகளையும், பிரசங்கியார் மீதும் இன்னும் ஒரு சில அங்கத்தினர்கள் மீதும் போட்டு விட்டு மற்றவர்கள் ஓடிப் போய் விடக்கூடாது. பிரசங்கியாருடைய தலையாய கடமை சுவிசேஷத்தைப் பிரகடனம் செய்வதே (அப் 6:2; 2தீமோ 4:2) மற்ற முன்னேற்றப் பணிகள் சபையாரின் வேலை. (அப் 6:5,6)

## V சபை சத்தியத்தை பிரகடணம் செய்ய வேண்டும்

இயேசு தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னதாவது: **நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வசிருஷ்டிகரும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்**

**விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்** ''(மாற்கு 16:15,16) அப்போஸ்தலர் நடபடி புஸ்தகத்தை வாசித்துப் பார்த்தால், அங்கே எப்படி நாள்தோறும் சுவிசேஷத்தைப் பிரகடனப்படுத்திக் கொண்டு வந்தார்கள் என்று அறியலாம்'' சிதறிப் போனவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்'' (அப் 8:4) ஆனால் இன்று நாம் காண்பது என்ன? அநேக சபைகள் ஆத்தும ஆதாயம் செய்வதை மறந்து விட்டன. சபை சிறு சிறு குழுக்களாகத் தேய்ந்து, தொழுது கொள்ளும் மையங்களாக மாறிக் கொண்டிருக்கிற பரிதாபமான நிலையை நாம் காண்கிறோம். பலஅங்கத்தினர்கள் கடமைக்காக வந்து உட்கார்ந்து விட்டுப் போய் விட்டால் இரட்சிப்பு உறுதியாகி விட்டது என்று நினைக்கிறார்கள். தங்களுடைய விசுவாசத்தைப் பெருக்கிக் கொண்டு ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் பணிக்குக் கை கொடுங்கள் என்று எவ்வளவு சொன்னாலும் அவர்கள் அதைக் காதில் போட்டுக் கொள்வதில்லை.

கொஞ்சம் வேகமாகக் சொல்லி விட்டால் அது ஒரு பெரும் பிரச்னை யாக உருவாகி வேறு பல சிக்கல்களை உருவாக்கும்.

ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரு சில ஆத்துமாக்களையாவது சபைக்கு அறிமுகம் செய்ய வேண்டியது தமமுடைய கடமை என்ற உணர்வு வேண்டும். சத்தியங்கள் அடங்கிய தாள்களை மற்றவர்களுக்கு விநியோகிக்கவேண்டும். ஒரு குடும்பத்தாரை ஒரு கிறிஸ்தவக் குடும்பம் விடாப்பிடியாக தொடர்ந்து பல வாரங்கள் பிரயாசப் பட்டு, சத்தியத்தைச் சொல்லி ஆதாயப்படுத்திக் கொண்டு வந்த-தாகச் சொன்னார்கள் ஆம், சகோதரரே, சாக்குப் போக்குச் சொல்லுகிறார்கள் என்று மனம் தளர்ந்து விட்டு விடக் கூடாது. கிறிஸ்தவ மார்கம் உபதேசிக்கப்பட வேண்டிய மார்க்கம் அதனுல் தான் இயேசுகிறிஸ்து, **அவர்களெல்லாரும் போதிக்கப் பட்டிருப்பார்கள்** என்கிறார் (யோவான் 6:45) அநேகர் அடிக்கடி ஞாபகப்படுத்துவதை வெறுப்பார்கள் என்பது உண்மை தான் அதற்காக நம்முடைய கடமையைச் செய்யாமல் இருக்கக் கூடாது. அதற்கு மேல் அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்களோ அதற் குரிய விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பு (எசே 33:8,9)

**முடிவுரை :** இவைகளெல்லாம் புதுவிதமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் அல்ல. வேதாகமம் பல்வேறு கால கட்டங்களில் வாழ்ந்த தம்முடைய மக்களுக்குப் பல சந்தர்ப்பங்களில் கூறிய அறிவுரைகள் தான். வேதாகமத்தை வாஞ்சையோடு ஊன்றிக் கற்றுச் சிந்திப்பவர்களுக்கு இவைகள் தேவனுடைய ஆலோசனை கள்தான் என்பது விளங்கும்.

தற்காலத்தில் ஒரு சில கூட்டத்தார், மற்றவர்களைக் காட்டிலும் தாங்கள் மேம்பட்டவர்கள் என்று காட்டிக் கொள்ள சபைக்குள்ளேயே ஒரு குட்டி சபையைத் தோற்றுவித்து இயல்பான தலைமைக்கு எதிராகவும் முரணுகவும் செயல்பட முயற்சிக்கின்றனர். இது தேவையற்ற சர்ச்சைகளை உருவாக்கி, சபையின் ஐக்கியத்-தைக் கெடுத்துப் போடும். ஏற்கனவே உள்ள முறைகள் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப் பட்டவைகள். அவைகளைச் செவ்வை யாய் பின்பற்றினுலே பிசாசை வென்று வெற்றி வாகை சூட்டிட முடியும். புதிதாக ஒன்றைச் செய்து சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு ஏமாந்து போகாதீர்கள். சபை வளர்ச்சிக்கு தேவனால் வகுத்துத் தந்துள்ள திட்டங்களை நம்பிக்கையுடனும் பயபக்தியிடனும் கடைப் பிடித்து வெற்றி பெறுவோமாக.

**E. Z. செல்வநாயகம்**

# நிச்சயமாய் நடக்கக் கூடியவைகள்

நாம் மிகவும் பயங்கரமான கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பய உணர்வு மக்களை ஆட்கொண்டிருக்கிறது. இன்றைக்கு நாம் சில காரியங்களைச் செய்ய வாய்ப்பு இருக்கலாம்; இதே நிலை நாளைக்கும் நீடிக்கும் என்று சொல்ல முடியாது. இந்த சூழ்நிலை நமக்கு கவலையையும், நம்பிக்கையின்மையையும், சோர்வையும் உண்டாக்குகின்றன.

பரிசுத்த வேதாகமம் கூட, நாளைக்கு என்ன நடக்கும் என்று அறியமாட்டோமே என்று கூறி நம்முடைய அறிவுக்கு எல்லை வகுத்திருக்கிறது. யாக் 4:13,14. ஆகவே இன்றைக்கு இருந்து நாளைக்கு மறைந்து போகும் அநித்தியமான உலகப் பொருட்களை நம்பி நாம் பெருமிதப்பட்டுக் கொள்ள முடியாது, (மத் 6:19-21) வாழ்க்கை என்பது. இப்படிப்பட்ட நிச்சயமற்ற காரியங்கள் மட்டும் நிறைந்ததா? நாம் நம்பிக்கை வைத்து நிம்மதியாக இருக்கக் கூடிய எதுவுமே இல்லையா? என்று திகைக்காதீர். சில மாறாத நிச்சயங்களும் உண்டு. இதோ! அவைகளில் சில முதலாவது நாம் ''**உலகத்தில் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை இங்கிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை**'' என்று தேவனுடைய ஆவியைக் கொண்டு பவுல் அப்போஸ்தலன் பொருள் பொதிந்த இந்த வார்த்தைகளைக் கூறி விட்டு, தொடர்ந்து அவர், ''**உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்.**

**ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும், அழிவிலும், அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளில் விழுகிறார்கள்.**

**பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்.**

**நீயோ, தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டோடி நீதியையும் தேவபக்தியையும், விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும், சாந்த குணத்தையும் அடையும்படி நாடு.**

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு நித்திய ஜீவனைப் பற்றிக் கொள். அதற்காகவே நீ**

**அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்** என்று கூறி வாழ்க்கையைப் பற்றி சில தெளிந்த கருத்துக்களை எடுத்து வைக்கிறார். *(1தீமோ 6:7-12)*

வாழ்க்கையில் இரண்டு காரியங்கள் நிச்சயம்: ஒன்று அரசாங்கம் விதிக்கும் வரி, மற்றொன்று சாவு என்றார் ஒருவர். அதில் உண்மையில்லை என்று சொல்லிவிட முடியாது. பவுல் அப்போஸ்தலன் மனிதன் உலகக் காரியங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம். கொடுக்கக் கூடாது. யாராக இருந்த போதிலும் நாம் எப்படி வந்தோமோ அப்படியே திரும்பிப் போவோம் என்பதை விளக்குகிறார். அதாவது நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை என்றும், நாம் ஒன்றும் கொண்டு போகப் போவதில்லை என்றும் கூறுகிறார். நாம் எப்போதும் நம்முடன் வைத்துக் கொள்ள முடியாத நாம் உலகைவிட்டுப் போகும்போது எடுத்துச் செல்லமுடியாத செல்வத்தைத் தேடுவதிலும், சம்பாதிப்பதிலும் நாம் இவ்வளவு அக்கறை காட்டுவது மதியீனமான காரியம். அதனால் எப்பொழுதும் நிலைத்திருக்கக் கூடிய நியாயமானதும், நன்மை பயப்பதுமான காரியங்களிலும் நாம் ஈடுபாடு கொள்ள வேண்டும். ''**பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கொடுக்கும் இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள் பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுவதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும்.** என்றார் கிறிஸ்து *(மத் 6:19-21)*

இரண்டாவதாக: கர்த்தருடைய வாக்குத் தத்தங்கள் மாறுதவைகள். பேதுரு, ,'தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணிகிறது போல கர்த்தர் தமது வாக்குத் தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்'' என்று கூறுகிறார். (2 பேதுரு 3:9) மனிதர் கொடுக்கிற வாக்குறுதிகளை நாம் எந்த அளவுக்கு நம்பலாம் என்பதில் நமக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தேவனுடை வாக்குறுதியைப் பொறுத்த வரையிலும் நாம் நூற்றுக்கு நூறு நம்பிக்கையுடன் இருக்கலாம். ''**நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்**'' என்கிறார். பவுல் (2 தீமோ 1:12) தேவன் பொய் சொல்லார் என்று அடித்துக் கூறுகிறார் எபிரேய நிருப ஆசிரியர் (எபி 6:18) **பொய்யுரையாத தேவன்**

**ஆதி காலமுதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணினார்** என்கிறார் பவுல் (தீத்து 1:3) கர்த்தர் தாம் நேசிக்கிற மக்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வாக்குத்தத்தங்களைக் கொடுத்திருக்கிறார் எடுத்துக் காட்டாக, ''அவர் எப்போதும் நம்மோடே கூட இருக்கிறார் (மத் 28:20) ''அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம்.'' (ரோமர் 8:28) "கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்." (எபே 1;3) இவைகளையல்லாமல் வேறு பல வாக்குத்தத்தங்களையும் தேவன் கொடுத்திருக்கிறார் அவைகள் அனைத்தையும் ஏற்ற வேளையில் நிறைவேற்றுவார் என்கிற நிச்சயம் நமக்கு உண்டு. ஏனெனில் கடந்த காலத்தில் அவர் கொடுத்திருந்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியிருக்கிறார்.

மூன்றாவதாக மரணமும் நியாயத் தீர்ப்பும் நிச்சயமானவைகள் ''**அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்பு அடைவது மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது**'' என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர் (எபி 9:27) அப்போஸ்தலன் பவுல் குறிப்பிடுவது போல கர்த்தர் மறுபடியும் வரும் போது சிலர் உயிருடன் இருப்பார்கள் என்றும் அவர்கள் மேகங்கள் வழியாய் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப் படுவார்கள் (I தெச 4:13-18) இப்போதுள்ள மாமிச சரீரத்தோடு ஒருவனும் பரலோகத்துக்கோ அல்லது நரகத்துக்கோ போகமுடியாது என்பதால் எல்லாரும் ஒன்று மரிக்க வேண்டும். அல்லது மறுரூபமாக்கப்பட வேண்டும். அதன் பிறகு நியாயத் தீர்ப்பைச் சந்திக்க வேண்டும். யோபு கூறுவதைப் போல ''ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தமனுமாயிருக்கிறான் (யோபு 14:1) யாக்கோபு "மேலும் நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்துக்குப் போய் அங்கே ஒரு வருஷம் தங்கி வியாபாரஞ் செய்து சம்பாத்தியம் பண்ணுவோம் என்புவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலம் தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே" என்கிறார் (யாக் 4:13-14)

நிச்சயமாக நாம் எல்லாரும் மரிக்கப் போகிறோம் ஆனால் அதற்குப் பிறகு என்ன? நியாயத் தீர்ப்பு நிச்சயம் ஆகையால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும். நாம்

மரணத்தை சந்திந்தே ஆகவேண்டும் அதைத் தவிர்த்து விடவோ, தள்ளிப் போடவோ, தப்பித்துக் கொண்டு வேறு வழியில் பரலோகத்தை அடைந்து விடவோ முடியாது. நாம் மரிப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவுக்கு நியாயத் தீர்ப்பை சந்திப்பதும் வெகு நிச்சயம். அந்த நியாயத் தீர்ப்பில் நாம் செய்த நன்மைகளுக்கோ அல்லது தீமைகளுக்கோ தக்கதாக நமக்கு நீதி வழங்கப்படுவோம். கிறிஸ்து நம்முடைய நியாயாதிபதியாக இருக்கிறார் (அப் 17:31) அவருடைய வசனங்களின்படி நியாயந் தீர்க்கப்படுவோம், (யோவான் 12:48) மத் 25:46 கூறியுள்ளபடி, பாவம் செய்தவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்கள் நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்.

**நான்காவதாக :** கிறிஸ்து மறுபடியும் வருவார் என்பது மாறாத நிச்சயம். இயேசு எப்படி எடுத்துக் கொள்ளப்பட்டாரோ அப்படியே திரும்பி வருவார் (அப் 1:11) இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கான சாட்சியங்கள் மறுக்க முடியாத அளவுக்குத் தெளிவாக இருந்த போதிலும் அநேகர் அதை நம்புவதில்லை (1 கொரி 15:1-8) அவர் உயிர்த்தெழுந்திராவிட்டால் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கை பொருள் அற்றதாயிருக்குமே. அவர் கல்லறையினின்று எழுந்து பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்துக்குப் போயிருக்கிறார். என்பது உண்மை. ஆகவே மறுபடியும் வருவேன் என்று சொன்ன வாக்குத் தத்தத்தை நிச்சயமாக நிறை வேற்றுவார். ஆயினும் சில பேர் சொல்லி ஆண்டுகள் ஆயிரங்களாய் உருண்டோடி விட்டன. இதுவரை அவர் வரவில்லை. இனிமேல் வருவது என்பது நடக்கிற காரியமாய்த் தோன்றவில்லை. என்று வாதிடலாம். பேதுரு வாழ்ந்த நாட்களிலும் அப்படிச் சொன்னவர்கள் உண்டு அதற்குப் பேதுரு அளித்த பதிலே இன்றைய அவிசுவாசிகளுக்கும் பொருந்தும் **"கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருடம் போலவும், ஆயிரம் வருடம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்றே இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்"** (2 பேது 3:8) அதாவது நாம் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிற வருடம் மாதம் எல்லாம் அவருடைய பார்வையில் அர்த்தமற்றவைகள், சொல்லி இரண்டாயிரம் ஆண்டுகளாகி விட்டனவே என்பதை வைத்துக் கொண்டு அவருடைய வாக்குத்தத்தங்களை சந்தேகிக்கக் கூடாது. அவர் காலத்தை வென்றவர்.

இயேசு மறுபடியும் எதற்காக வருகிறார்? இது அநேகருடைய கேள்வி. அவர் மீண்டும் வருவதற்குச் சில காரணங்கள் உண்டு

1. அவருடைய வாக்குறுதியை நிறைவேற்ற.
2. எல்லாக்காரியங்களுக்கும் ஒரு முடிவு உண்டாக்க.

3. வானத்தையும் பூமியையும் அழித்துப்போட (2 பேது 3:10).

4. மரித்துப் போன நல்லவர்களையும், தீயவர்களையும் கல்லறை- யிலிருந்து உயிரோடு எழுப்ப (யோவான் 5:28,29).

5. மனுக்குலம் அனைத்தையும் நியாயம் தீர்க்க (யோவான் 12:48)

6. தம்முடைய பிள்ளைகள் அடங்கிய இராஜ்ஜியமாகிய சபையை தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்க (1 கொரி 15:24).

ஆம், நண்பர்களே, கிறிஸ்து மறுபடியும் வருகிறார் என்பது மாறாத நிச்சயம். நீங்கள் அவரைச் சந்திக்க ஆயத்தமா? நிச்சய- மானவைகள் என்று கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள காரியங்களுக்குச் செவிமடுத்து விசுவாசியுங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்- காக வாழ்ந்து அவரைச் சந்திக்க ஆயத்தமாகுங்கள்.

J. C. சோட்

## ஐயோ! ஐயோ!! ஐயோ!!!

தாங்கள் மாத்திரம் தேசத்தின் நடுவில் வாசமா யிருக்கும்படி மற்றவர்களுக்கு இடமில்லாமற் போகு மட்டும் வீட்டோடே வீட்டைச் சேர்த்து வயலோடே வயலைக் கூட்டுகிறவர்களுக்கு ஐயோ!

சாராயத்தை நாடி அதிகாலமே எழுந்து மதுபா- னம் தங்களைச் சூடாக்கும்படி தரித்திருந்து இருட்டில் போகுமளவும் குடித்துக் கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ!

தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமை யென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப் பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ!

பரிதானத்துக்காக குற்றவாளியை நீதிமானுத் தீர்த்து, நீதிமானின் நியாயத்தை அவனுக்கு விரோத மாய்ப் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ!

# கிறிஸ்தவத்தில் சர்வமும் கிறிஸ்துவே

## கிறிஸ்துவுக்கே சகல அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன

அரசியலில் ஆகட்டும், மார்க்க சம்பந்தமான காரியங்களிலாகட்டும் யாருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று தெரியாமல் எவர் சொன்னாலும் சரி, சரி என்று தலையாட்டிக் கொண்டு நடந்தால் எதுவுமே உருப்படியாக நடைபெறாது குழப்பமே மிஞ்சும் நிர்வாகம் ஸ்தம்பித்துப் போகும். யாருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, யார் அறிவித்தால் அது அதிகார பூர்வமான அறிவிப்பாக இருக்க முடியும் என்பதை விபரம் தெரிந்தவர்கள் புரிந்து கொள்வார்கள்.

கிறிஸ்தவத்தைப் பிடித்துள்ள பீடைகளுக்கெல்லாம் மைய காரணமாக இருப்பது மார்க்க விஷயத்தில் யாருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்ற தெளிவின்மை தான் என்றால் மிகையாகாது. ஒரு சமயம் பிரதான ஆசாரியரும், ஜனத்தின் மூப்பரும் இயேசுவினிடத்தில் வந்து **''நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்?''** என்று கேட்டார்கள் (மத் 21:23) இயேசு கிறிஸ்து அதற்காக அவர்களைக் கோபித்துக் கொள்ள வில்லை. ஏனெனில் ஒரு காரியத்தைச் செய்வதற்கு ஒருவனுக்கு முறையான அதிகாரம் வேண்டும் என்பதை இயேசு அறிந்திருந்தார். அவர்களுடைய கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் அவர்கள் முன்னால் எதிர்க் கேள்வி ஒன்றைப் போட்டார். **''யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றா? அல்லது மனுஷரால் உண்டாயிற்றா?** என்று கேட்டு அவர்களை மடக்கினார். (மத் 21:25) அவர்கள் மழுப்பினார்கள். ஆகவே மார்க்க விஷயத்தில் ஒன்றைச் செய்வதற்கு யாருக்கு அதிகாரம் உண்டு என்பதைத் தெரிந்து கொள்வோமானால் இன்று கிறிஸ்தவம் குழப்பத்தின் உறைவிடமாக, கேலிக்குரியதாகக் காட்சி தரும் அவலநிலை ஏற்பட்டிருக்காது.

அதிகாரங்கள் இருவகைப்படும். ஒன்று மூல அதிகாரம் இரண்டாவது கொடுக்கப்பட்ட அதிகாரம். மூல அதிகாரம் என்பது ஒரு காரியத்தைக் குறித்துக் கட்டளை கொடுப்பதற்கோ, சட்டம் இயற்றுவதற்கோ சட்டத்தின் மூலமாய் அதிகாரம் பெற்றது. கொடுக்கப்பட்ட அதிகாரம் என்பது சட்டத்தின் மூலமாய் அதிகாரம் பெற்ற ஒருவர் அந்த அதிகாரத்தின் மூலமாய் தனக்கு உரிமையளிக்கப்பட்டுள்ள பணிகளைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் வேறொருவருக்கு அந்த அதிகாரத்தை வழங்குவது.

வானத்தையும், பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் படைத்தவர் என்ற வகையில் தேவனுக்கு சகல அதிகாரமும் உண்டு. அதை இயேசு கிறிஸ்துவுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார் என்று பின் வரும் வேத வாக்கியங்கள் மூலமாக அறியலாம். ''இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள் (மத் 17:5)'' இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்''.

'இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்'' (எபி 1:2) ஆகிய வசனங்கள் அதை நமக்குத் தெரிவிக்கின்றன. தேவனிடத்திலிருந்து அதிகாரம் பெற்றவர்கள் சிலர் உண்டு அவர்களில் இயேசுவைப் போல் அதிகாரம் பெற்றவர்கள் எவருமிலர். ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்று இயேசுவே கூறுகிறார் (மத் 28:18) இந்த யுகத்தின் கடைசி பரியந்தம் அவருடைய ஆளுகை நிலை பெற்றிருக்கும் (1 கொரி 15:25,26) ஆகவே கிறிஸ்தவத்தின் மையமும் நாயகனும் கிறிஸ்துவே அவருடைய வார்த்தைகள் வேத வசனங்களில் எடுத்தாளப்பட்டும், அவருடைய அதிகாரம் வெளிப்படுத்தப்பட்டும் இருக்கிறது.

''வானமும் பூமியும் ஒழிந்து போம் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை. என்கிறார் கிறிஸ்து (மத் 24:35) மேலும் குறிப்பாக என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறது ஒன்று இருக்கிறது நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாட்களில் நியாயம் தீர்க்கும். (யோவான் 12:48) ஆகிய வசனங்கள் இயேசு கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் அளவையும் மேன்மையையும் நமக்கு அறிவிக்கின்றன.

கிறிஸ்தவ மார்க்கம் சம்பந்தப்பட்ட காரியங்களில் கிறிஸ்துவுக்குள்ள அதிகாரத்தை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு இன்னும் சில வசனங்களைக் கூட ஆய்ந்து பார்ப்போம். கிறிஸ்தவம் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தைகள் அடங்கியது என்பதை நாம் அறிவோம். அந்த வார்த்தை கிறிஸ்துவே. ''ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது .... அந்த வார்த்தை மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம் அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாயிருந்தது'' (யோவான் 1:1,14) தேவன், வார்த்தையாக இருந்த இயேசுவை மனித சாயலில் உலகத்துக்கு அனுப்பி தமது சித்தத்தை நல்லமுறையில்

உலகத்தாருக்கு வெளிப்படுத்த அனுப்பி வைத்தார். ''நியாயப் பிரமாணம் மோசேயினால் கொடுக்கப்பட்டது; கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்து மூலமாய் உண்டாயின'' (யோவான் 1:17) என்று சொல்லப்பட்டிருப்பதின் பொருள் அது தான். இதை இன்னும் தெளிவுபடுத்த **நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்** என்கிறார் இயேசு (யோவான் 14:6)

**தேவனுக்கும் மனிதனுக்கும் பாலம் கிறிஸ்துவே**

மேலே, நானே வழியும் சத்தியமும் ஜீவனும் என்று சொன்னவர் ''நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான் அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்'' என்றும் (யோவான் 10:9) கூறுகிறார். இதை வியாக்கியானம் செய்யும் வகையில் பவுல், ''நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்'' என்கிறார் (எபே 2:18) உலகில் காணப்படுகிற மாளிகைகள் அரண்மனைகள் ஆகியவற்றிற்கு நிறையக் கதவுகள் இருக்கலாம். ஆனால் தேவனிடத்தில் கிட்டிச் சேர்வதற்கு ஒரே ஒரு கதவு தான் உண்டு அந்த வாயில் இயேசுவே.

**இயேசு கிறிஸ்துவை இரட்சிகர்**

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே தேவதூதன் ஒருவனால் ''அவர் ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்'' என்று அறிவித்தான். (மத் 1:21) அதே தூதன் அந்நாட்களில் அங்கே மந்தையைக் காவல் செய்து கொண்டிருந்த மேய்ப்பர்களிடத்தில் ''பயப்படாதிருங்கள், இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்'' என்று அறிவிக்கிறார் (லூக் 2:10,11)

சில காலத்துக்குப் பிறகு கர்த்தருக்குப் பிரியமான அப்போஸ்தலன் யோவான் ''பிதாவானவர் குமாரனை உலக இரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்'' என்கிறார் (1யோவான் 4:14) அதே போலப் பவுலும், **நம்முடைய இரட்சிகர்** என்று ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் குறிப்பிடுகிறார் (தீத்து 1:4;2 தீமோ 1:10)

**இயேசுகிறிஸ்து இராஜா**

இதைக் குறித்து அறிந்து கொள்ள பிலாத்து விரும்பினபொழுது ''என்னுடைய இராஜ்ஜியம் இவ்வுலகத்துக்குரியதல்ல.

என் இராஜ்ஜியம் இவ்வுலகத்துக்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே இப்படியிருக்க என் இராஜ்ஜியம் இவ்விடத்துக்குரியதல்ல'' என்று சற்று சுற்றி வளைத்துப் பதிலளித்த இயேசுவிடத்திலிருந்து குறிப்பான பதிலை வரவழைக்க ''அப்படியானால் நீர் இராஜாவா? என்று பிலாத்து கேட்கிறான் இயேசு பதிலுக்கு ''நீ சொல்லுகிறபடி நான் இராஜாதான் சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன். இதற்காகவே இந்த உலகத்திற்கு வந்தேன் சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்'' என்றார் (யோவான் 18:36,37) சத்திரத்தின் முன்னணையில் பிறந்து காலமெல்லாம் ஏழ்மையில் உழன்று பாவிகளோடும், ஆயக்காரரோடும் தோழமை பூண்டு வாழ்ந்தாலும் அவர் இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிறார் (1 தீமோ 6:15 வெளி 17:14;19:16)

## இயேசு கிறிஸ்துவே சபைக்குத் தலை

''எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி

''எல்லாவற்றையும், எல்லாவற்றாலும், நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிக்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'' (எபே 1:22,23) இதை இன்னும் உறுதிப்படுத்தி'' ''அவரே சபையாகிய சரீரத்துக்கு தலையானவர் எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற் பேறுமானவர்'' என்கிறார் (கொலோ 1:18) மேலும் விசுவாசிகளின் வளர்ச்சி பற்றிக் கூறும்போது ''அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளர்கிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.

''அவராலே சரீரம் முழுவதும் அதற்கு உதவியாகயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு ஒவ்வொரு அவயமும் தன் தன் அளவுக்குத் தக்கதாகக் கிரியை செய்கிறபடியே அது அன்பினாலே தனக்குப் பக்தி விருத்தி உண்டாவதற்கேதுவாக சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது (எபே 4:1516) வேறொரு இடத்தில் ''ஒவ்வொரு மனுஷனுக்கும் தலை கிறிஸ்துவே (1 கொரி 11:3) இதை நாம் சரியாகப் புரிந்து கொள்வதற்குப் பின் வரும் விளக்கத்தைக் கொடுக்கிறார் ''கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். (எபே 5:23) நாம் தலையை மட்டுமல்ல சரீரத்தையும் கூட கணப்படுத்துவது அவசியமன்றோ! கிறிஸ்து போதும், சபை வேண்டாம் என்பது எப்படி? சபைக்கு மனிதன் தலைவனாவது என்ன நியாயம்? சிந்திப்பீர்!

''இயேசுகிறிஸ்துவே விசுவாசத்தின் அஸ்திபாரமும் மூலைக் கல்லுமாயிருக்கிறார்.

''எனக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப் போல அஸ்திபாரம் போட்டேன் வேறொருவன் அதின் மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின் மேல் இன்ன விதமாய்க் கட்டுகிறான் என்று பார்க்கக்கடவன். போடப்பட்டிருக்கிற கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது (1 கொரி 3:10, 11) இந்தக் காரியத்தைக் குறித்து அப்போஸ்தலன் பேதுருவும் தீர்க்கன் ஏசாயா கூறியதை மேற்கோள் காட்டி ''இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப் பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும் விசுவாசிக்கிறவன் பதறான்.'' என்கிறார் (ஏசாயா 28:16; 1பேதுரு 2:6) மேலும், பவுல் எபேசியருக்கு எழுதும்போது ''ஆகையால் நீங்கள் அந்நியரும் பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து அப்போஸ் தலர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களாயிருக்கிறீர்கள் அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்'' (எபே 2:19,20) ஆகிலும் ''தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது. கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும் கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை விட்டு விலக்கக்கடவன் என்பதும் அதற்கு முத்திரையாக இருக்கிறது. (2தீமோ 2:19)

இறுதியாக இப்பிரபஞ்சத்துக்கு சூரியன் மையமாக இருக்கிறது போல கிறிஸ்துவும், கிறிஸ்தவ மார்க்கத்தின் மையமாக இருக்கிறார். வேதாகமம் முழுவதும் அவரையே சுட்டுகிறது அவருடைய வருகைக்கு முந்தினவைகளெல்லாம் அவருடைய வருகைக்கு ஆயத்தப்பட எழுதப்பட்டவைகள். அவர் வருகைக்குப்பிறகு எழுதப் பட்டவைகளெல்லாம் அவர் உலகத்துக்கு வருகை தந்ததைப்பற்றி விவரிக்கிறது. தேவன் மனுக்குலத்துக்குத் தந்த ஈவுகளில் அவரே சிரேஷ்டமானவர். மனிதன் செய்யக்கூடிய மிகப்பெரிய அறிக்கை நான் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்வதே ஆகும் (அப் 8:37) அப்படிச் செய்து உங்கள் ஆத்துமாவை இரட்சிக்கும் விசுவாசமுள்ள கீழ்ப்படிதலுக்கு வழி நடத்தும். (எபி 5:89)

**தில்லார்டு தர்மன்**

# பட்டங்களுக்காகப் பறக்காதீர்

''புறஜாதிகளுடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும் பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படியிருக்கலாகாது.

உங்களில் எவனாகிலும் பெரியவனாக இருக்க விரும்பினால் அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாக இருக்கக்கடவன். (மத் 20:25,26). என நமது இரட்சகர் இயேசு கூறினார்,

மேட்டிமையான பட்டங்களைத் தங்கள் பெயரோடு இணைத்துக்கொள்ள விரும்புகிற விளம்பர விரும்பிகளைக் கண்டித்து ''நீங்கள் எல்லோரும் சகோதரராயிருக்கிறீர்கள் (மத் 3:8) என்று நினைவுபடுத்தி, பட்டங்கள் சூட்டிக்கொண்டு உங்களை மற்றவர் களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்று எண்ணும் எண்ணத்தை விட்டு விடுங்கள் என்று அறிவுறுத்துகிறார்.

''சகோதரர் இன்னார்'' என்று ஊழியர்களுக்கு அடைமொழி கொடுக்கும் வழக்கம் கிறிஸ்துவின் சபைகளிலே உள்ள ஒரு நடைமுறை. அது கூட ஊழியர்களுக்குப் பட்டம் அல்ல, கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒரு பெண்மணியை எப்படி ''சகோதரி'' என்று அழைக்கிறோமோ அதே போன்று கிறிஸ்துவுக்குள் உள்ள ஒரு ஆண் மகனைக் குறிக்க சகோதரன்'' என்று சொல்லைப் பயன்படுத்துகிறோம். அவ்வளவு தான்.

இயேசு இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருந்த நாட்களில் போதகர்களாக இருந்த வேதபாரகரும் பரிசேயரும் தங்களை ''ரபீ'' என்று மற்றவர்கள் மரியாதைப் பண்புடன் அழைக்க வேண்டும் என்று எதிர்பார்த்தனர். அதற்காக தங்களுக்கு சிறப்பு ஆடையாக நீண்ட அங்கிகளை அணிந்து கொண்டு விருந்துகளில் முதன்மையான இடங்களையும் ஜெப ஆலயங்களில் சிறப்பு ஆசனங் களையும், மரியாதைகளையும் பெற விரும்பினார்கள்.

இன்றைய நாட்களிலும் போதகர்களில் பலர் ''குரு'' என்று அழைக்கப்படுவதை விரும்பி ஒரு புதிய ஜாதியைத்தோற்றுவித்திருக்கிறார்கள். அதில் பல அடுக்குகள் உண்டு சங்கைக்குரிய,'' ''அதிசங்கைக்குரிய'' வணக்கத்துக்குரிய என்று வித விதமான பட்டங்களையெல்லாம் தங்கள் பெயர்களோடு இணைத்துக்கொண்டு பெருமிதத்தோடு உலா வருகின்றனர்,

முதலாம் நூற்றாண்டுச் சபையை மீட்டு அமைப்பதாகக் கூறிக்கொள்ளும் கிறிஸ்துவின் சபை ஊழியர்களும் இதற்கு விதி விலக்கல்ல. (ஊழியன் என்றால் தொண்டன் என்று பொருள்). மற்றவர்கள் இவர்களோ தவறு என்று தெரிந்தும் மற்றவர்கள் எளிதாகக் கண்டு கொள்ளா வண்ணம் தங்கள் இச்சைகளை நிறை வேற்றிக் கொள்ளத் துடிக்கிறார்கள். ''குழுமத் தலைவர்'' - திண்ணைப் பள்ளிப் கூடத்துக்குள்ள தகுதி தகுதி இல்லாத நிறுவனங்களுக்கு கல்லூரி அந்தஸ்துக் கொடுத்து அதற்கு டைரக்டர், முதல்வர் - மருத்துவக் கல்லூரியின் நிழலில் கூட ஒதுங்காதவர்கள் எல்லாம் ''டாக்டர்'' இப்படி ஏதேதோ........

சகோதரர்களே, வேண்டாம் இந்த வீண் வேலைவாக்கிலும், செய்கையிலும், அன்றாட வாழ்விலும் முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவத்தை மீட்டு அமைப்போம்.

தேர்ந்தெடுக்கப்பட்டது.


## இந்திய அஞ்சல்துறை அறிவிப்பு

ஈரோடு தலைமை அஞ்சல் நிலையம், கருங்கல் பாளையம், பள்ளிப்பாளையம் கொமாரபாளையம்ஆகிய அஞ்சலகங்களில் துரித அஞ்சல் சேவை (Speed Post Service) வசதி உள்ளது. பொது மக்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பாடல்கள் அடங்கிய பாட்டுப்புத்தகங்கள் கிடைக்கும்.

விலை ரூ 3-00

அணுகுக: E.Z. செல்வநாயகம்
2. மணல்மேடு வீதி
ஈரோடு 638002

# தேவனின் கட்டளைகள்

''ஒருவன் தன்னை தீர்க்கதரிசி என்றாவது, ஆவியைப் பெற்றவன் என்றாவது எண்ணினானல், நான் உங்களுக்கு எழுது கிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக் கொள்ளக் கடவன்'' *(1 கொரி 14:37)*

கள்ளப் போதகர்களை அடையாளங் காட்டும் அளவு கோலாக அப்போஸ்தலன் பவுல் அறிவுறுத்தும் வசனப் பகுதியே மேலே காணப்படுவது. அப்போஸ்தலருடைய உபதேசத்துக்கு மாறுபட்டவைகளைப் போதித்தவர்கள் கள்ளப் போதகர்களாக இருந்தனர். பவுல் காலத்திலேயே பல கள்ளப் போதகர்கள் இருந்தனர். எனவே தான், ''ஒருவன் தன்னை தீர்க்கதரிசி என்றாவது ஆவியைப் பெற்றவனென்றாவது எண்ணிக் கொண்டு'' அதே சமயம் தேவனுடைய அதிகாரத்தின் பேரில் பவுல் பேசுவதை ஏற்க மறுப்பவன் கள்ளப் போதகனாக இருக்கிறான் என பவுல் எழுத வேண்டியதாயிற்று. பவுல் எழுதியவையோ, பேசியவையோ பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட தேவனுடைய செய்திகள் என ஏற்றுக் கொள்ள மறுத்த எல்லா போதகர்களும் கள்ளப்போதகர்களே. இன்றுள்ள நிலைக்கும் இக்கூற்று பொருந்தும். அப்போஸ்தலன் பவுல் தனது சொந்த அபிப்பிராயங்களையோ, கற்பனைக் கதைகளையோ, கனவில் கண்டவற்றையோ வேதாகமத்தில் எழுதி வைக்கவில்லை. மாறாக, பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அவருக்கு அளிக்கப்பட்ட தேவனுடைய சத்தியங்களை மட்டுமே அவர் எழுதினார். *(2 தீமோ 3:15-17; 1 கொரி 2:9-16)* ஆம் தேவனுடைய கட்டளைகள் அதிகாரம் படைத்தவைகள்; மனிதன் ஒதுக்கித் தள்ளக் கூடிய, முக்கியத்துவமற்ற எந்த கட்டளைகளையும் தேவன் தரவில்லை. *(கலா 1:6-9; எபிரே 5:8,9)*

நாம் சோதித்துப் பார்த்தால், எண்ணற்ற மனிதக் கற்பனைகள் (கட்டளைகள்) இடம் பெற்றிருப்பதை இனங்காண முடியும். *(மத் 15:9)* தேவனுடைய கட்டளைகளை செயலாற்றதாக்கி விடும் மனிதக் கட்டளைகள் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள மாற்கு எழுதிய சுவிசேஷம் 7ம் அதிகாரம 6 முதல் 13 வசனங்களை நாம் படித்துப் பார்ப்பது அவசியம். தேவனுடைய கட்டளைகளை விட மனிதனுடைய கட்டளைகளைப் பின்பற்றுவதே சரி என செயல்படும் இலட்சக்கணக்கான மக்களை நாம் இன்று காண்பது உண்மையே. சகல வேதாகமப் போதகர்களும், ஆசிரியர்களும் 2 தீமோத்தேயு 4:1-5 வசனப்பகுதிகளை தங்கள் மனதில் பதித்து வைத்துக் கொள்ள நாம் விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இந்நாட்களிலே நம்மீது திணிக்கப்படும் மனிதக்கற்பனைகள் எண்ணற்றவை. அவற்றில் இதோ சில : நாம் விரும்பும் ஏதாவது ஒரு சபையில் அங்கத்தினராக இருக்கலாம்.' இரட்சிப்புக்கு விசுவாசம் மட்டும் போதும். 'தண்ணீர் தெளித்து, அல்லது ஊற்றி, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தாலும் தடையில்லை. இவையாவும் வேதாகமத்தில் காணப்படாத, இடைச் செருகலான மனிதக்கட்டளைகள்.

இயேசு கிறிஸ்து ஒரு புதுக்கட்டளையைத்தந்தார். அதாவது, ''நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என்று எல்லோரும் அறிந்து கொள்ளுவார்கள் என்றார்'', (யோவான் 13:34,35). இயேசு நம்மை நேசித்தது போல, நாம் ஒருவருக்கொருவர் அன்பு காட்ட வேண்டும் என்பதே மேலே குறிப்பிட்ட வசனப்பகுதியின் சாராம்சமாகும். எவ்வித நிபந்தனையுமின்றி, முற்றிலுமாக இயேசு நம்மீது அன்பு செலுத்தினார். அதே போன்று நாமும் பிறரில் அன்பு செலுத்தவேண்டும் சரியான முறையில் இதை செயலாக்கும் வழி இதோ; ''உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போலப்பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும் நீங்கள் ஒருவராலொருவர் கடித்துப்பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.'' (கலாத் 5; 14-15). சங்கீதம் 15:1-5 வசனப்பகுதிகளையும் தயவு செய்து படித்துப்பாருங்கள். ''மனிதர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குக் செய்யுங்கள்''. (மத். 7:12) என்ற தங்கச் சட்டத்தை எப்பொழுதும் கடைபிடியுங்கள். ''நீங்கள் புறப்பட்டுப் போய் ...... உலகம் முழுவதும் நற்செய்தியை அறிவியுங்கள்'' (மத். 28:18-20) என்பது தேவனுடைய மற்றுமோர் கட்டளையாகும். நமது முதற் கடமை என்ன என்று இங்கு தெளிவாக்கப்பட்டுள்ளது. சபையானது தேவனுடைய சத்தியத்தின் தூணும் ஆதாரமுமாய் இருக்கிறது. (அப். 8:4; எபே. 3;9-11; 1தீமோ 3:14-15). வீழ்ந்து போனவர்களை மீட்கவல்ல தேவனின் ஆயுதம் அவருடைய நற்செய்தியாகும், (ரோமர் 1;16). தேவனின் நற்செய்தியை (சுவிசேஷம்) சகலருக்கும் அறிவிக்கும் நமது கடமையிலிருந்து நாம் தவறினால் இரட்சிக்கப்படவிருந்தோரின் இந்தப் பழிக்கு நாம் தப்ப முடியாது என்பது திண்ணம். (அப் 20:26,27; எசேக் 33:11, 31-33).

அவருடைய வார்த்தையை நாம் விசுவாசிக்க வேண்டுமென தேவன் கட்டளையிடுகிறார். ''நாம் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்து, அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கிறது'' (1 யோவான் 3:23) ''விசுவாசியாத எவனும் தேவனுக்குப் பிரியமாயி-ருப்பது கூடாத காரியம்'' (எபி 11:6) ஆனால், ''விசுவாசம்'' தேவனுடைய பரிசுத்தமான வார்த்தையைக் கேட்பதால் வருகிறது (ரோமர் 10:17 விசுவாசத்தினால் மாத்திரம் ஒருவன் இரட்சிப்-படைய முடியாது. (யாக் 2:14,17;19; 24-26) சர்வ வல்லமை-யுள்ள தேவனுக்குக் கீழ்படியத் தக்கதாக விசுவாசம் ஒருவனை வழி நடத்தும் போது அந்த விசுவாசத்தால் அவன் இரட்சிக்கப்படு-கிறான். (ரோமர் 5:1-2; 6:3-4) கிரியையில்லாத விசுவாசத்தால் மட்டுமே இரட்சிப்படைய முயற்சிப்பது "செத்துப்போன பிணத்தை நடமாடச் செய்யும் முயற்சிக்கு ஒப்பாகும். (யாக் 2:26)

இயேசுவின் நாமத்தை அபிக்கையிடுதல் மற்றுமோர் தேவ. னின் கட்டளையாகும். ''மனிதர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனிதர் முன் பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ அவனை நானும் பர லோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்'' (மத் 10:32-33) இயேசுவை ''அறிக்கையிடுதல்'' என்றால் அவருடைய நாமத்தை அறிக்கையிடுவதாகும் நமது அனுபவங்களையோ, உணர்ச்சிகளையோ அல்ல. ''இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன்'' என எத்தியோப்பிய மந்திரி அறிக்கையிட்டான். (அப் 8:37) இயேசுவை அறிக்கை செய்தல் எவ்வளவு முக்கியமென்று நமக்குக் காட்டுகிறது ரோமர் 10:9,10 வசனங்கள், ''இயேசுவின் பெயரால் தேவன் என் பாவங்களை யெல்லாம் மன்னித்து விட்டதாக நான் உணருகிறேன்'' என யாரா வது அறிக்கையிட்டதாக சுவிசேஷத்தில் எங்கும் காண முடியாது

மனந்திரும்ப வேண்டுமென எல்லா மக்களுக்கும் தேவன் கட்டளையிட்டிருக்கிறார். (அப் 17:30 31) மனந்திரும்புதல் என்-றால் என்ன? ஒரு புதிய நல்ல வாழ்க்கை வாழ வேண்டும் என்று மனதுக்குள் தீர்மானிப்பதே மனந்திருப்புனலின் விளைவாகும். பாவத்திலிருந்து விடுபட்டு, தேவனை நோக்கித் திரும்புதலே நாம் குறிப்பிடும் மனமாற்றத்தில் ஏற்படும் செயலாகும். வனந்திரும்பு-தல் பற்றி மத்தேயு 21ம் அதிகாரம் 28,29 வசனங்கள் அருமையாக சித்திரிப்பதை நாம் காண முடியும். அந்த வசனங்களை வாசித்துப் பாருங்கள், பாவ மன்னிப்புக்குள்ள நிபந்தனைகளில் மனந்திரும்பு-

தலும் ஒன்றாகும். (லூக். 13:3; அப். 2:38; 3:19) கீழ்ப்படிய மிகக் கடுமையான கட்டளைகளில் மனந்திரும்புதல் பிரதானமானது. ஏனெனில் இது மனித விருப்பு சம்பந்தப்பட்டது தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ள பலர் விரும்புவதே இல்லை. ஆனால் மனிதர்களை நம்ப வைப்பதற்காக வேஷம் போடுவார்கள். மெய்யாய் மனஸ்தாபப்பட்டு வாழ்க்கைப் பாதையை மாற்றிக் கொள்ள வேண்டும்.

நாம் குறிப்பிட விரும்பும் கடைசி கட்டளை ஞானஸ்நானம் ஆகும். **''கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான்.''** (அப். 10:48) **''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் ; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்''** (மாற்கு 16:16). ''....சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்றார்கள் பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' அப். 2.37-38 ஞானஸ்நானம் ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளும், அவருடைய மரணத்துக்குள்ளும் நடத்தி, இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் அவன் பாவங்கள் கழுவப்படச் செய்கிறது (அப் 22:16; ரோமர் 6:3-4).

அருமையான வாசகரே! தேவனுடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் இடறலடையாதீர்! நன்று என்பதை அன்றே செய்வீர்! அப் 16:33; II கொரி 62 வசனங்களை சிந்திப்பீர்!

**W.A. ஹாலி** **எஸ். எஸ். ராஜன்**

## தேவனின் கட்டளைகள் ஐந்து

1. துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே; தீயோருடைய வழியில் நடவாதே.
2. தீமையை வெறுத்துவிடு, அதன் வழியாய்ப் போகாதே; அதை விட்டு விலகிக்கடந்து போ.
3. பொல்லாப்புச் செய்தாலொழிய அவர்களுக்கு நித்திரை வராது; அவர்கள் யாரையாகிலும் விழப்பண்ணாதிருந்தால் அவர்கள் தூக்கம் கலைந்துபோம்.
4. துன்மார்க்கன் ஆகாமியத்தின் அப்பத்தை புசித்து, கொடுமையின் இரசத்தைக் குடிக்கிறார்கள்.
5. நீதி மான்களுடைய பாதை நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாய் பிரகாசிக்கிற சூரியப் பிரகாசம் போலிருக்கும். நீதி: 4-14:18

# இயேசுவின் காயங்கள்

பின்பு அவர் தோமாவை நோக்கி, ''நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப்பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு'' என்றார். யோவான் 20:27). இயேசு கிறிஸ்துவின் காயங்களின் வடுக்களை தான் தடவி பார்த்த பின்னரே தோமா நம்புகிறார் என இவ்வசனத்தின் மூலம் அறிகிறோம். நண்பர்களே ! இயேசுவின் காயங்களின் வடுக்களை நாம் காண முடியாது. ஆனால் அவை இருந்தன என்பது உண்மை. அதை நம்புங்கள்.

ஒரு கை அல்லது காலில் அடிக்கப்படும் ஆணி சதையைக் கிழித்துக் கொண்டு மறுபுறம் வரும் போது அது ஏற்படுத்தும் பயங்கர வேதனையை நீங்கள் எப்போதாவது கற்பனை செய்து பார்த்ததுண்டா ? இயேசுவின் சதையை ஆணிகள் பிய்த்துக் கொண்டு போன போது அவர் எவ்வளவு வேதனையை அனுபவித்திருப்பார் என நினைத்துப்பாருங்கள். ஆகாயத்துக்கும் பூமிக்கும் இடையே அந்தரத்தில் அவருடைய சரீரத்தை தொங்க விட்ட போது அவர் பட்ட பாட்டை எண்ணிப் பாருங்கள். அந்த காயங்களிலிருந்து வழிந்தோடும் இரத்தத்தை தன் கையால் தடவி ஆறுதலடைய அவர் நினைத்தும், கைகளையோ கால்களையே அசைக்க முடியாத அவருடைய அவல நிலையை சிந்தித்துப்பாருங்கள். அப்பப்பா, அந்த வேதனையை வார்த்தைகளால் வடிக்க இயலுமோ?

அந்த வேதனை போதாது என்பது போல் சிலுவையின் பாடுகள் இயேசுவை இன்றும் தொடருவதுதான் மகாக் கொடுமை: இன்று அவர் அனுபவிக்கும் வேதனைகளை, அன்றைய சிலுவையின் பாடுகளோடு ஒப்பிட்டு வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. ''மறுதலித்துப் போனவர்கள் தேவனுடைய குமாரனைத்தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறார்கள்'' (எபி. 6:4 6). சிலுவையின் பாடுகள் போதாதென்று, இயேசுவின் இரத்தத்தால் பாவங்கள் சுத்திகரிக்கப்பட்ட தேவனின் மக்கள் விசுவாசத்தில் வீழ்ச்சியடைந்து (லூக்கா 8:12) கிறிஸ்துவை புறக்கணித்து விட்டு, உலகப்பாதைக்குத் திரும்பும் போது, மீண்டுமாக கிறிஸ்து பாடுகளை அனுபவிக்கிறார்.

சகோதரர்களே, இயேசுவின் விருப்பத்திற்கு மாறாக நாம் நடக்கும் போது அவரை எவ்வளவு வேதனையடையச் செய்கிறோம் என்பதை உணர்ந்து பார்ப்போம்! அவருடைய விருப்புக்கு மாறாக நாம் வாழ்ந்து அவரை மீண்டும் வேதனையடையச் செய்வோம் என உறுதி எடுத்துக் கொள்வோம்.

பல மாதங்களுக்கு முன்னர், அரசின் பொறுப்பான பதவி வகித்த ஒரு தளபதி பற்றிய பழைய கட்டுரை ஒன்றை படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. தனது நாட்டிற்காக நீண்ட காலம் கடின மான போரில் ஈடுபட்டிருந்திருக்கிறார் அவ்வயோதிக மனிதர். போர்க்களத்திலே காயமுற்று முகத்திலே அசிங்கமான வடு ஒன்றை யும் பரிசாகப் பெற்றிருக்கிறார். காலப்போக்கில், அரசியல் காழ்ப் புணர்ச்சியின் விளைவாக, அவரைப் பதவி நீக்கம் செய்திட பல அரசியல்வாதிகள் ஒன்று கூடி விவாதித்து, வாக்கெடுப்பு நடத்த ஏற்பாடு செய்கின்றனர். அந்த தளபதியின் கீழ் முன்னர் சிப்பாயாக பணி புரிந்த ஒரு நபரும் இந்த அரசியல்வாதிகளில் ஒருவர்.

பதவி நீக்கப்படலம் ஆரம்பித்தது. பல அரசியல் வாதிகளும் ஒவ்வொருவராக வந்து தளபதிக்கு விரோதமாக வாக்களித்தனர். கடைசியாக அவரை பதவி நீக்கம் செய்ய தேவைப்பட்டது ஒரே ஒரு வாக்கு. அந்த வாக்கை அளிக்க வேண்டிய நபர் பழைய சிப்பாயான அந்த அரசியல்வாதி வாக்குப் பெட்டியை நோக்கி நடந்து வந்த அவர் கண்களுக்கு, எதிரேயுள்ள வராண்டாவில் நமது தளபதி அமர்ந்து வாக்குப்பதிவை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த காட்சி தெரிந்தது. தளபதியின் முகத்தில் கண்ட போர்க்காலக் காயத்தின் வடு, அரசியல்வாதிக்கு பழைய நினைவு களைத் திருப்பிற்று. உடனே, தன் கையிலிருந்த வாக்குச் சீட்டை சுக்கு நூறாகக் கிழித்தெறிந்து விட்டு, ''இல்லை.. இல்லை நான் இப்படி செய்ய முடியாது அந்த வடுவைப்பார்க்கும் போது அவருக்கு விரோதமாக வாக்களிக்க என்னால் முடியாது''. என்று கத்தினார் அந்த அரசியல்வாதி.

என் நண்பர்களே! இயேசுவின் காயங்களை நினைத்துப் பாருங்கள் பாவ வாழ்க்கை வாழ்ந்து, அவருக்கு விரோதமாக வாக்களிக்காதீர்கள்! அவருடைய காயங்களைப் பாருங்கள்; சொட்டும் இரத்தத்தைப் பாருங்கள். உங்களுக்காக மரித்த அவருக் காக மட்டுமே தொடர்ந்து வாழுங்கள்.

**டான் வில்லியம்ஸ்** **தமிழில் : எஸ் எஸ். ராஜன்**

# தேவனுக்குக் கீழ்ப்படிதல்

''ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்.''
(யாக்கோபு 4:7)

நமது இரட்சிப்பின் திட்டத்திலும், தேவனோடு தொடர்ந்து நடப்பதிலும், முக்கியமான அம்சம் தேவனுக்கு நம்மை ஒப்புக் கொடுப்பது அல்லது அவருக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிவதாகும். **''என்னுடைய சித்தத்தின் படியல்ல, ஆனால் உமது சித்தத்தின்படியே நடக்கக் கடவது.''** என நாம் கூறுவதே தேவனோடு நாம் இணைவதற்குரிய தாரக மந்திரம். தேவனுக்குக் கீழ்ப்படிவதற்கான அடிப்படை அம்சங்கள் சிலவற்றைக் கீழே காண்போம்.

1. **முற்றிலுமாக நம்மை ஒப்புக் கொடுப்பது:** தேவனுக்கு நாம் கீழ்ப்படிவதாக இருப்பின், முற்றிலுமாக நம்மை அவருக்கு ஒப்புக் கொடுத்தாக வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு இக்காரியத்தில் நாம் பின் தங்கிப் போகிறோமோ, அவ்வளவுக்கு தேவன் நம் வாழ்வில் ஏற்படுத்தவிருக்கும் மாற்றத்திற்கு தடை விதிக்கிறோம் என்று பொருள். ''இரண்டு நினைவுகளால் குந்திக் குந்திக் நடப்பதை'' (1 ராஜாக்கள் 18:21) தேவன் விரும்புவதில்லை. லவோதிக்கேயா சபைக்கு இயேசு கூறினார். ''நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்'' (வெளி. 3:15). ''இரண்டு எஜமான்களுக்கு நாம் ஊழியஞ் செய்ய இயலாது.'' (மத் 6:24) தேவனிடம் நம்மை ஒப்புக் கொடுப்பது முழுமையாக இருக்க வேண்டும்.

2. **தாழ்மை** தான் என்ற அகம்பாவிதத்தை நமது வாழ்க்கையிலிருந்து அகற்றிப் போட வேண்டும். **''தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்''** (யாக் 4:7). **அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்''** (1 பேதுரு 5:6). என்பதின் பொருளை உய்த்துணர்வோம்.

3. **மனஸ்தாபப்படுதல்:** நமது பாவங்களுக்காகவும், நமது துர்க்குணங்களுக்காகவும், நாம் மெய் மனஸ்தாபப்படாமல் உண்மையான ஒப்புக் கொடுத்தல் நிகழ முடியாது.

தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்படியும் நிலையை நம்மில் உருவாக்க நமது சுய சித்தத்தைக் களைந்தெறிய வேண்டும். தேவன் நமது உள்ளத்தில் குடியேற, அதை பரிசுத்தமாக வைத்துக் கொள்வது அவசியமாகும். ஒரு கண்ணாடி தம்ளரில் சுத்தமான நீரை ஊற்றுமுன், தம்ளரை சுத்தப்படுத்துவது போல, ஆசீர்வாதங்-

களால் நமது வாழ்க்கை நிரப்பப்பட, தாழ்மைக்கும், ஒப்புக் கொடுத்தலுக்கும் வழி நடத்தும் மனஸ்தாபப்படுதல் அவசியமா கிறது.

4. **நம்பிக்கை :** தேவனை முழுமனதோடு விசுவாசித்தாலொழிய நாம் அவருக்கு நம்மை உண்மையாக ஒப்புக் கொடுத்தவர்களாக மாட்டோம் எந்த அளவுக்கு நமது பிரச்சனைகளை நாமே தீர்த்துக் கொள்ள முயற்சிக்கிறோமா அவ்வளவுக்கு தேவனிடம் நம்மை ஒப்புக் கொடுக்க மறுக்கிறோம் என்றாகிறது. தந்தை கொடுத்த 25 பை நாணயத்தைவேண்டாமென மறுத்து விட்டு, அதற்குப் பதிலாக 10 பை கேட்ட சிறுமியின் நிலையில் நாம் இருக்கிறோம். ஏன் என அவர் கேட்ட போது, ''10 பைசா தானே பெரிதாக இருக்கிறது'' என்றாள் அவள் அதுபோல, தேவனுடைய தீர்மானத்தை விட நமது சொந்த தீர்ப்பில் நம்பிக்கை வைக்கும் போது, அவரிடமிருந்து கிடைக்கும் எண்ணற்ற ஆசீர்வாதங்களை இழந்து போகிறோம். தேவன் பேரில்நம்பிக்கை வைக்காததின் விளைவே அது. ''உன் சுய புத்தியில் சார்ந்திராமல், உன் இதயப்பூர்வமான் நம்பிக்கையை உன் தேவன் பேரில் வை.'' அவருடைய சகல ஆசீர்வாதங்களையும் தடையற்றுப் பெற்றுக் கொள்வாய்.

**ஸ்டீவ் வில்லியம்ஸ்** **தமிழில் : S.S. ராஜன்**

**(28-ம் பக்கத் தொடர்ச்சி)**

இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்று போகும்; பூதங்கள் வெந்து உருகிப் போகும், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.'' --2பேதுரு 3:9,10.

''எந்த நீதிபதியின் கைகளில் நமது உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிறதோ அவரைப்பழிப்பது மகா தவறான செயலாகும். ஆனால் இவ்வுலகம் முழுவதையும் நீதி செலுத்துபவரின் கைகளில் நமது நித்திய வாழ்வே ஒப்படைக்கப்பட்டிருக்கையில் அவரைப் உதாசீனப்படுத்துவதை மேலே சொன்ன செயலோடு ஒப்பிடுவதே புத்தியீனமான செயல் அல்லவா?''

''நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிற (யோவான் 14:6) நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே ! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்''
— மத்தேயு 11 : 28

''மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்கு வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்று முடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்'' — எபிரேயர் 7:25.

''ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்''.
—வெளி. 22:17

**G.F. ரெயின்ஸ்**

# உன் தேவனை சந்திக்க ஆயத்தப்படு

''ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமானது'' (எபி. 10:31) என்பதை அறிந்த தீர்க்கத்தரிசி ஆமோஸ் கூறினார். ''இஸ்ரவேலே, உன் தேவனை சந்திக்கும்படி ஆயத்தப்படு'' - ஆமோஸ் 4:12.

பழைய ஏற்பாட்டில் பிரபலமான வசனப்பகுதியில் ஒன்று பிரசங்கி 12:13,14 வசனங்களாகும்: காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனிதர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும் அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்தில் கொண்டு வருவார்''

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய விசுவாசத்தின் அடிப்படை உண்மைகளில் ஒன்று, தேவன் ''ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனிதனைக் கொண்டு, பூலோகத்தை நீதியால் நியாயந்தீர்ப்பார்; அந்த மனிதனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்'' - அப். 17 : 31; 2கொரி 5:10; வெளி. 20 : 11 - 15. அந்த மகத்தான நாளிலே ''நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனுக்குக் கணக்கு ஒப்புவிப்பான்'' - ரோமர் 14:12.

தேவனை சந்திக்க ஆயத்தமாகும்படி, நற்செய்திக்கு கீழ்ப்படிந்து, கிறிஸ்து வழியாக அவரோடு ஒப்புரவாக்கப்பட்டிருக்க வேண்டும். தயவு செய்து யோவான் 14;6; ரோமர் 1:16,17 மாற்கு 16:16; அப். 2:38 ஆகிய வசனங்களைப் படியுங்கள். தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டவர்கள் 'ஒரே சரீரத்தில்' (எபே. 2;16) அதாவது 'சபை'யில் (கொலோ. 1:18) இருக்கிறார்கள். இயேசுவின் உயிர்ப்புக்குப்பின் வந்த முதல் பெந்தேகோஸ்தே நாளிலே சுவிசேஷத்தை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்து தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே திருமுழுக்குப் பெற்ற மக்கள் (அப். 2:1:47) தேவனால் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அந்த மக்களைப் போலவே இன்றும் விசுவாசித்து, கீழ்ப்படியும் அனைவரையும் அப்போஸ்தலர் காலத்தில் எந்த சபையில் தேவன் இணைத்தாரோ அதே சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். ஏனெனில், ''தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல; ஆனால் எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்''. — அப். 10:34,35.

கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கம் வகிக்கும் சகலரும் தாங்கள் அழைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டதை நிச்சயப்படுத்திக் கொள்ளும் வண்ணமாக ''தெளிந்த புத்தியும், நீதியும், தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகில் வாழ்ந்து, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமான இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்படி, அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும் நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்'' தீத்து 2;11-14.

தெளிந்த புத்தியும், நீதியும், தேவ பக்தியும் உள்ளவர்களாக நாம் வாழ்வது எப்படி என மிகவும் தெளிவாகவும் குறிப்பிட்டும் விளக்குகிறார் அப்போஸ்தலர் பேதுரு ''..நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள் இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களைத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை. இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்ஜியத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்,'. 2 பேதுரு 1:5 11.

உன் தேவனை சந்திக்க ஆயத்தப்பட்ட உண்மையான ஒரே வழி உன் தேவனோடு வாழ்வதுதான். அப்படியானால் அவரை சந்திப்பது உனக்குக் கடினமாகவோ புதுமையாகவோ இருக்காது.

உன் தேவனை சந்திக்க ''இன்றே'' ஆயத்தப்பட வேண்டும் ஏனென்றால் ''ஒரு நாள் பிறப்பிப்பதை நீ அறியாயே'' (நீதி 27:1)

''நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருடம் தங்கி, வியாபாரஞ் செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே'' — யாக்கோபு 4:13,48.

''தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். கர்த்தருடைய நாள்


26-ம் பக்கம் பார்க்கவும்

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker: Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi -110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridays-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:15 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker: P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker: Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## கிறிஸ்தவ சிந்தனையாளர் கருத்தரங்கம்

1.6.91 சனிக்கிழமையன்று பாளையங் கோட்டை தூய யோவான் கல்லூரிக் கலையரங்கத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் கலந்து கொண்டும், சிறப்புரையாற்றியும் தொண்டு ஆற்றியும் ஒத்துழைப்புக் கொடுத்த அனைவருக்கும் திருமறை ஆசான் சார்பிலும், விழாக் குழுவின் சார்பிலும் எங்கள் உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE - 638 001.